தினமணி
Friday, April 18, 2014

# மருத்துவமனைகளின் நிர்வாகம் குறித்த சிறப்பு கருத்தரங்கம்:

சென்னை : மருத்துவமனைகளின் நிர்வாகம் குறித்த 2 நாள் சிறப்பு கருத்தரங்கம் வரும் மே 9, 10 ஆகிய தேதிகளில் சென்னை சங்கர நேத்ராலயா கண் மருத்துவமனையில் நடைபெறவுள்ளது.

"மருத்துவமனை நிர்வாகத்தில் வளர்ந்து வரும் போக்குகள்' என்ற தலைப்பில் நடத்தப்படும் இந்த நிகழ்ச்சியில் நோயாளிகளின் தரத்தை முன்னிறுத்தி பெற்ற வெற்றிகள், மாறி வரும் மருத்துவமனைகளின் நிர்வாகப் போக்குகள், மருத்துவம் மற்றும் சேவைத் துறையைச் சேர்ந்த வல்லுநர்கள் சந்தித்த சவால்கள், உன்னதமான சுகாதாரத் துறைச் சேவையை சிறப்பாகப் பயன்படுத்தக் கூடிய உத்திகள் உள்பட பல்வேறு அம்சங்கள் குறித்து விவாதிக்கப்படவுள்ளது.

இதில் சுகாதாரம் மற்றும் சேவை நிறுவனங்களைச் சேர்ந்த முக்கிய நிர்வாகிகள், வழக்குரைஞர்கள், டாக்டர்கள், செவிலிய துறை மாணவர்கள் மற்றும் மருத்துவ மேலாண்மைத் துறை மாணவர்கள் உள்ளிட்டோர் கலந்துகொள்கின்றனர்.

சங்கர நேத்ராலயா அகாதெமி சார்பில் இந்த கருத்தரங்கம் நடத்தப்படவுள்ளது. இந்த கருத்தரங்கிற்கு விண்ணப்பிக்க 20/04/2014 -ஆம் தேதி கடைசி நாளாகும்.

இது குறித்த மேலும் தகவல்களுக்கு **www.thesnacademy.ac.in** என்ற இணையதளம் அல்லது **97104 85295** என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

http://www.dinamani.com/edition_chennai/chennai/2014/04/18/மருத்துவமனைகளின்-நிர்வாகம/article2175139.ece